இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 281 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 09 – சனிக்கிழமை 23 மே 2026 – சென்னை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 281 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 09 - Saturday 23 May 2026 - Chennai 8 Pages ₹ 5.00

## நல்லதைப் பாராட்டி – அல்லதை விமர்சிக்கும் ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம் !

### எந்தக் கட்சிக்கும் தங்களது அரசியல் முடிவைத் தீர்மானிக்கும் உரிமை உண்டு!

# யார் மனதையும் புண்படுத்தும்படி கடும் சொற்களைப் பேச வேண்டாம் !

### தலைவர் மு.க.ஸ்டாலின் - கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்!

**சென்னை, மே 23-**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிடுகையில், "எந்தக் கட்சிக்கும் தங்களது அரசியல் முடிவைத் தீர்மானிக்கும் உரிமை உண்டு" எனவும், "கழகத் தோழர்கள் இந்த நேரத்தில் யாரைப் பற்றியும் கடும் சொற்களைக் கொண்டு அவர்கள் மனம் புண்படும்படி பேச வேண்டாம்" என்றும், "நல்லதைப் பாராட்டி அல்லதை விமர்சிக்கும் ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**மாண்புமிகு அமைச்சர்களாகப் பொறுப்பேற்றுள்ள நம் கொள்கைத் தோழமைகள் வன்னி அரசு அவர்களுக்கும், ஷாஜஹான் அவர்களுக்கும் எனது வாழ்த்துகள்!**

**தங்களது அரசியல் முடிவைத் தீர்மானிக்கும் உரிமை எந்தக் கட்சிக்கும் உண்டு. எனவே கழகத் தோழர்கள் இந்த நேரத்தில் யாரையும் புண்படுத்தும்படி கடுஞ்சொற்களைப் பேச வேண்டாம் என்பதுதான் உங்கள் தலைவராக எனது அன்பு வேண்டுகோள்.**

**பேரறிஞர் அண்ணா வழியிலும், முத்தமிழறிஞர் கலைஞர் வழியிலும் வந்தவர்கள் நாம். அதை மறந்திட வேண்டாம். நல்லதைப் பாராட்டி, அல்லதை விமர்சிக்கும் ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

# வெறும் பெயரளவில் மட்டுமே செயல்படும் 'சிங்கப்பெண்' திட்டம்!

### 'தி டைம்ஸ் ஆஃப் இந்தியா' கடும் விமர்சனம்!

சென்னை, மே 23-

த.வெ.க. அரசின் சிங்கப்பெண் சிறப்புப்படை திட்டம் வெறும் பெயரளவில் மட்டுமே செயல்படுவதாக 'தி டைம்ஸ் ஆஃப் இந்தியா' ஆங்கில நாளிதழ் கடுமையாக விமர்சித்துள்ளது.

'தி டைம்ஸ் ஆஃப் இந்தியா' ஆங்கில நாளிதழ் வெளியிட்ட செய்தியில், முதலமைச்சர் விஜய் பொறுப்பேற்ற அன்றைய தினமே அவர் அறிவித்த பெண்கள் பாதுகாப்புக்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படை, எதுவும் சாதிப்பதற்கான அதிகாரமும் படைபலமும் இல்லாமல் செயல்படுவதாக கூறியுள்ளது. ஒரு வாரத்திற்கு பிறகு, ஐஜி தலைமையில் 36 பேர் கொண்ட சிறப்புப்படை உருவாக்கப்பட்டது. 37 மாவட்டங்கள் மற்றும் ஒன்பது காவல் ஆணையரகத்திற்கு வெறும் 36 பேர் கொண்ட சிறப்புப்படை போதுமானதா? என்று கேள்வி எழுப்பியுள்ளது.

தமிழ்நாட்டில் ஏற்கனவே ஏடிஜிபி தலைமையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்புபிரிவு செயல்பட்டு வருவதாக கூறிய டைம்ஸ் ஆஃப் இந்தியா, இந்த பிரிவுக்கு ஐஜி, மாவட்டங்கள் மற்றும் காவல் ஆணையரகங்கள் கொண்ட கட்டமைப்பும் துணையாக இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்பு பிரிவில், ஐந்தாயிரத்து 300 காவலர்கள் உள்ளனர்.

மாநிலம் முழுவதும் 244 மகளிர் காவல் நிலையங்கள் உள்ளன. ஆட்கடத்தலை தடுக்க 32 பிரிவுகளும், பெண்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க, 7 புலனாய்வுக் குழுக்களும் குழந்தைகள் கடத்தலை தடுக்க 43 பிரிவுகளும், 39 சிறார் காவல் பிரிகளும் தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வருவதை மேற்கோள்காட்டி, இத்தகைய விரிவான கட்டமைப்பு ஏற்கனவே செய்துவரும் பணிகளை தான், இந்த 36 பேர் கொண்ட சிங்கப்பெண் சிறப்புப்படையும் செய்ய உள்ளதாக 'தி டைம்ஸ் ஆஃப் இந்தியா' தெரிவித்துள்ளது.

---

### திருப்பரங்குன்றம் கோயிலில் அமைச்சர் தரிசனத்திற்காக

# தாமதமாக நடை சாத்தியது குறித்து அறிக்கை தர வேண்டும்!

### அறநிலையத்துறைச் செயலாளருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, மே 23-

திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சாமி கோயிலில் அமைச்சர் நிர்மல் குமார் தரிசனத்துக்காக நடை தாமதமாக சாத்தப்பட்டது தொடர்பாக அறநிலையத்துறை செயலாளர் அறிக்கை தாக்கல் செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மதுரை திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சாமி கோயிலில் தமிழக அமைச்சர் நிர்மல் குமார் கடந்த 15ம் தேதி தரிசனம் செய்தார். வழக்கமாக கோயில் நடை மதியம் 12.45 மணிக்கு சாத்தப்படும். ஆனால் அமைச்சருக்காக கோயில் நடை திறந்து வைக்கப்பட்டிருந்தது.

அமைச்சரின் தரிசனத்துக்கு பிறகே கோயில் நடை சாத்தப்பட்டது. அதேபோல, கருவறையில் அமைச்சர் தரிசனம் செய்த வீடியோவும் சமூக வலைதளங்களில் பரவியதால் பக்தர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இந்நிலையில், கோயில்களில் சிறப்பு கட்டண தரிசன முறையை எதிர்த்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, திருப்பரங்குன்றம் கோயிலில் நடந்த விவகாரம் குறித்து நீதிபதிகள், அமைச்சர் கோயிலுக்கு சென்றபோது என்ன நடந்தது என்பது குறித்து அறநிலையத்துறை செயலாளர் அடுத்த வாரம் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

---

### தமிழ்த்தாய் வாழ்த்தை

# மீண்டும் மீண்டும் அவமதிக்கும் த.வெ.க. அரசு !

### பல்வேறு தரப்பினர் கண்டனம்!

சென்னை, மே 23-

தமிழ்த்தாய் வாழ்த்தை மீண்டும் மீண்டும் த.வெ.க. அரசு அவமதித்து வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அமைச்சரவையின் இரண்டாம் நாள் பதவியேற்பு நிகழ்விலும் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டதற்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்தும், முடிவில் தேசிய கீதமும் பாடப்படுவது வழக்கமாகும். முந்தைய திமுக ஆட்சியில் அப்போதைய ஆளுநர் பல்வேறு நெருக்கடிகள் கொடுத்தும் தமிழ்த்தாய் வாழ்த்தே முதலில் பாடப்பட்டது. இறுதியில் மட்டுமே தேசிய கீதம் பாடப்பட்டது. இதனால், ஆண்டின் தொடக்கத்தில் நடைபெறும் முதல் சட்டப்பேரவை கூட்டத்தொடரில் தனது உரையை வாசிக்காமல் ஆளுநர் திரும்பி சென்ற நிகழ்வுகளெல்லாம் அரங்கேறியது. ஆனால் அதற்கெல்லாம் அஞ்சாத திமுக அரசு, தமிழ்நாட்டின் மரபை மாற்றாமல் தொடர்ந்து பின்பற்றியது.

ஆனால் அதற்கடுத்து வந்த த.வெ.க அரசோ, புதிய ஆளுநரின் அழுத்தத்துக்கு அடிபணிந்து, தமிழ்நாட்டின் மரபை மீறி செயல்பட்டு வருகிறது. விஜய் தலைமையிலான அமைச்சரவை பதவியேற்பின்போது, ஆளுநரின் உத்தரவுக்கு ஏற்ப தமிழ்த்தாய் வாழ்த்து 3வது இடத்துக்கு பின்னுக்குத் தள்ளப்பட்டு முதலில் வந்தே மாதரம் பாடலும், இரண்டாவதாக தேசிய கீதமும் பாடப்பட்டன. இதற்கு கடும் எதிர்ப்பும், கண்டனமும் எழுந்தது.

இதனையடுத்து விளக்கம் கொடுத்த த.வெ.க., அரசு, தமிழ்நாட்டின் மரபு இனி மீறப்படாது என்று உறுதியளித்தது. ஆனால், ஆளுநர் மாளிகையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை பதவியேற்பு விழாவில் தமிழ்த்தாய்வாழ்த்து பின்னுக்குத் தள்ளப்பட்டு மீண்டும் வந்தே மாதரம் பாடல் முதலில் பாடப்பட்டுள்ளதற்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்நிலையில், இரண்டாவது நாளாக இன்றும் அரசு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளது. ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற அமைச்சரவை பதவியேற்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து பின்னுக்குத் தள்ளப்பட்டு மீண்டும் வந்தே மாதரம் பாடல் முதலில் பாடப்பட்டுள்ளது. ஒன்றிய பாஜக அரசுக்கு அடிபணிந்து, அரசு விழாக்களில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை தவெக அரசு பின்னுக்குத் தள்ளிவிட்டதாக குற்றச்சாட்டியுள்ளனர்.

**இதுதான் மாற்றமா?**

தமிழ்த் தாயை பின்னுக்குத் தள்ளியது தான் புதிய மாற்றமா? என பல்வேறு தரப்பினரும் த.வெ.க., அரசுக்கு கேள்வி எழுப்பியுள்ளனர். "மாற்றம்" என்று வேடமிட்டு வந்தவர்கள், தமிழர்களின் உயிர்மூச்சான "தமிழ்த்தாய் வாழ்த்தை" மூன்றாம் பட்சமாக நிறுத்தித், தமிழ்த்தாயின் முகத்தில் கரியைப் பூசியுள்ளனர்! என்று கண்டனம் தெரிவித்துள்ளனர். மரபுகளைச் சிதைத்துத் தமிழை அவமதிப்பது தான் நீங்கள் ஊரெல்லாம் கூவிய மாற்றமா? என தவெக அரசை பலரும் விமர்சித்துள்ளனர்.

---

# தமிழ்நாட்டில் 17 இடங்களில் 100 டிகிரி வெயில்!

### நாடு முழுவதும் நாளுக்கு நாள் சுட்டெரிக்கும் வெயில்!

சென்னை, மே 23-

கோடை வெப்பமானது தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் சுட்டெரிக்கிறது நேற்று 17 இடங்களில் 100 டிகிரியை தாண்டியது. அதிகபட்சமாக வேலூரில் 109 டிகிரி பாரன்ஹீட் பதிவானது. தமிழ்நாட்டில் நேற்று 11 இடங்களில் வெயில் 100 டிகிரி பாரன்ஹீட்டை தாண்டி பதிவாகியது.

திருத்தணி, மீனம்பாக்கம், ஈரோடு, நுங்கம்பாக்கம், திருச்சி, மதுரை என பல இடங்களில் வெயில் வாட்டி வதைத்துள்ளது. வரும் 25ம் தேதி வரை கடலோர தமிழகம், புதுகை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் 24 டிகிரி செல்சியஸ் வரை வெப்ப நிலை உயரக்கூடும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

மேலும் சென்னையில் இன்று ஒரு சில இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும் என்றும் கணித்துள்ளது. தவிக்கும் கோடை வெப்பமானது நாடு முழுவதும் மக்களை வாட்டி வதைக்கிறது.

---

### த.வெ.க.வுக்கு வாக்களிக்க பெற்றோரை நிர்பந்திக்க

# குழந்தைகளிடம் பிரச்சாரம் - விசாரணை கோரி பொதுநல வழக்கு !

### தேர்தல் ஆணையம் பதில் தர உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, மே 23-

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் த.வெ.க.வுக்கு வாக்களிக்குமாறு பெற்றோரை நிர்பந்திக்க வேண்டும் என்று குழந்தைகளுக்கு வேண்டுகோள் விடுத்து த.வெ.க. தலைவர் விஜய் பிரச்சாரம் செய்தது தொடர்பாக விசாரணை நடத்த உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு பதிலளிக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடலூர் மாவட்டம் புவனகிரியைச் சேர்ந்த வழக்கறிஞர் வாசுகி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பொது நல மனுவில்,

கடந்த ஏப்ரல் 21ம் தேதி சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட தவெக தலைவர் விஜய், த.வெ.க.வுக்கு வாக்களிக்குமாறு பெற்றோருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று குழந்தைகள் மீது உணர்வுப்பூர்வமாக செல்வாக்கை செலுத்தியுள்ளார். இது பரவலாக பத்திரிகைகளிலும், சமூக ஊடகங்களிலும் வெளியாகியுள்ளது. குறிப்பாக மயிலாப்பூர், ஆலங்குளம், திருமங்கலம் உள்ளிட்ட தொகுதிகளில் பணப்பட்டுவாடா நடந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இருந்தும் தேர்தல் ஆணையம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதில் சுதந்திரமான விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் கனிமொழி மதி ஆஜரானார். மனுவை விசாரித்த நீதிபதிகள், இந்த மனுவுக்கு மே 29ம் தேதிக்குள் பதிலளிக்குமாறு தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டனர்.

